DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE)
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, THIRUPATTUR DISTRICT

| Name | ஜெகதீசன் | Village | நிம்மியம்பட்டு |
|---|---|---|---|
| Father's Name | வீராராகவ கவுண்டர் | Taluk | வாணியம்பாடி |
| Age | 75 | Calling | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1872 on the day of **09.04.2026**

**O.S. No. 99 /2019** **வா.சா.1** **01.07 PM – 02.09 PM**

**குறுக்கு விசாரணை–**

1. நான் நான்காம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். எத்தனை ஐட்டம் சொத்துக்களாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 ஐட்ட சொத்துக்கள் ஆகும். முதல் ஐட்டம் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 67 சென்ட் ஆகும். அந்த 67 செண்டு முதலில் யாருக்கு பாத்தியப்பட்ட இருந்தது என்றால் எனது தந்தை வீரா கவுண்டருக்கு பாத்தியப்பட்டது.

2. எனது தந்தை தற்போது உயிருடன் இல்லை, கடந்த 2001 ஆம் வருடம் இறந்துவிட்டார். எனது தந்தைக்கு மூன்று ஆண் குழந்தைகள் என்றால் சரியல்ல நான்கு ஆண் குழந்தைகள் பூபதி, ஜெகதீசன், பக்தவச்சலம் மற்றும் ஸ்ரீராம் ஆகும். 67 செண்டு சொத்து குறித்து எனது தந்தை இறப்பதற்கு முன்பு எவ்வித ஆவணமும் ஏற்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார்.

3. எந்த தேதியில் தான செட்டில்மென்ட் பத்திரத்தை என் பெயரில் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் தேதி நினைவில்லை 1994 –ம் வருடம் எழுதி கொடுத்துள்ளார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆனது நான் கூறும் அந்த பத்திரம் என்றால் ஆமாம். 67 சென்டில் அதில் எனக்கு எவ்வளவு பங்கு எழுதிகொடுத்துள்ளார் என்றால் 3ல் 1 பங்கு எழுதி கொடுத்துள்ளார்.

4. மேற்படி சொத்தை தான் இன்றைய தேதி வரையிலும் அனுபவித்து வருகிறேன் என்று சொன்னால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட மூன்றில் ஒரு பங்கு சொத்திற்கு உண்டான தனியாக செக்குபந்தி எழுதப்பட்டுள்ளது என்றால் இல்லை. இன்று தேதி வரையில் என்னுடைய பங்கான 22 ⅓

சென்ட் நிலத்திற்கு என் பெயரில் பட்டா ஏதும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான்.

5. இன்றைய தேதி வரையில் 67 சென்ட் நிலத்திற்கு மூன்று பேர் பெயரிலும் கூட்டு பட்டாவாக தான் வருகிறது என்று சொன்னால் சரிதான். இன்றைய தேதி வரையில் மேற்படி 67 சென்ட் சொத்தை பிரித்துக் கொடுக்குமாறு பாகப்பிரிவினை வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. மேற்படி 67 சென்ட் நிலத்தின் சர்வே எண்.427/2A என்றால் சரிதான். மேற்படி சொத்தில் 1 கிணறும், 2 வீடும் தற்போது உள்ளது என்றால் சரிதான், தற்போது பழுதடைந்துவிட்டது. சர்வே எண்.427/2A–ல் எத்தனை உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமான பட்டா எண்.888–ல் சர்வே எண்.427/2A1A உட்பிரிவில் 0.84.54 ஹெக்டேர் நிலம் இருப்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அது என் பெயர் மற்றும் பிரதிவாதிகளின் பெயரில் உள்ளது என்றால் ஆமாம். மற்றும் அதனுடைய புலவரைப்படம் இதுதானா என்றால் ஆமாம். **(மேற்படி ஆவணமான சர்வே எண்.427/2A1A க்கான பட்டா மற்றும் புலவரைபடம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

7. 67 செண்ட் நிலம் குறித்து எனது தந்தை என் பெயருக்கு 1/3 பாகம் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை தவிர வேறு எதுவும் ஆவணம் இல்லை என்றால் சரிதான். நான் கூறும் வழி குறித்த வருவாய்த்துறை ஆவணம் ஆன புலவரை படமோ அல்லது வேறு ஆவணமோ எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை மாமுலாக வழி உள்ளது.

8. நான் கூறும் 10 அடி அகலத்தில் 100 அடி நீளத்திற்கு வழி இருப்பதாக காட்டி எவ்வித எழுத்து பூர்வமான பதிவு செய்யப்பட்ட ஆவணம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான் மாமூலாக வழி செல்கிறது. பொதுவாக மாமூலாக வழி என்று சொன்னால் அது வரப்பு வழி தான் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது பத்திரத்தில் குறிப்பாக இவ்வளவு நீள அகலம் என்று வழி எதுவும் குறிப்பிடவில்லை.

9. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் எந்த ஆவணத்திலும் வண்டி வழி என குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் வா.சா.ஆ.2 –ல் சொத்து விவரத்தில் 6–ம் பக்கத்தில் முதல் பத்தியில் "பொது வண்டி வழிக்கு மேற்கும்"

என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கு கிழக்கிலும் தெற்கிலும் வண்டி வழி செல்கிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.2–ல் 26 சென்டிற்கு மேற்கில் யாருடைய சொத்து உள்ளது என்றால் சொன்னால் என்னுடைய சொத்து உள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் எழுதி கொடுத்த வீராககவுண்டர் மற்றும் பூபதி ஆகியோர் நிலம் வடக்கில் உள்ளது என்றால் சரிதான்.

10.எனவே வழி தனியாக உள்ளது என்றாலும், என்னுடைய சொத்து தனியாக உள்ளது என்று சொன்னாலும் சரிதான். பிரதிவாதிகளின் நிலத்தின் வழியாக மேற்படி வண்டி வழி செல்வதாக வா.சா.ஆ.2–ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதேபோல் நான் தாக்கல் செய்துள்ள மற்ற ஆவணங்களிலும் பிரதிவாதிகளின் சொத்துகளுக்கு நடுவே வண்டி வழி செல்வதாக குறிப்பு எதுவும் இல்லை என்று சொன்னால் சாட்சி பொது வழி செல்கிறது என கூறுகிறார்.

11.பிரதிவாதிகளின் நிலம் வழியாக பொது வண்டி வழி போகிறது என்று எந்த பத்திரத்திலாவது எழுதி உள்ளதா என்றால் சரிதான், ஆனால் பொதுவாக வழி செல்கிறது பத்திரத்தில் குறிப்பிடவில்லை. வருவாய்த்துறை மூலம் 1997 மற்றும் 2007 ஆம் வருடத்தில் கள ஆய்வு செய்து வரைபடம் தயாரித்தார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

12.பொதுவாக ஒரு வழியானது 15 வருடங்களுக்கு மேலாக இருக்கிறது என்றால் வருவாய்த்துறை ஆவணங்களில் குறிப்பிடுவார்கள் என்று சொன்னால் சரிதான், 1994 இல் இருந்து நாங்கள் சென்று வருகிறோம். அவ்வாறு வண்டி வழியை பயன்படுத்தி வந்தோம் என்பதை காண்பிப்பதற்கு எழுத்துப்பூர்வமான ஆதாரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் குறிப்பிடும் வண்டி வழிக்கு செக்கு பந்தி விவரமும் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான் மாமூலாக வழியை நாங்கள் பயன்படுத்துகிறோம். நான் கூறும் வழியானது எந்த சர்வே எண்கள் மற்றும் செக்கு பந்தி விபரம் உள்ளது என அடையாளம் காண முடியாது என்று சொன்னால் சரிதான், மாமூல் வழியாக சென்று கொண்டிருக்கிறது.

13. இன்றைய தேதி வரையில் நான் கூறும் 10 அடி அகலம் 100 அடி நீளம் வழிக்கு செக்கு பந்தி விவரம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். 1994–லிருந்தே சர்வே எண்.427/2A 67 சென்ட் நிலமாக தான் உள்ளது என்றால் சரியல்ல, வழி தற்போது வரை உள்ளது இன்றைக்கும் அதில் தான்

செல்கிறோம். இன்றைக்கும் 10 அடி அகலத்திற்கும் 100 அடி நீளத்திற்கும் வழி உள்ளதா என்றால் இருக்கிறது. மேற்படி நான் கூறுவது போன்று வழி நான் பயன்படுத்தி வருகிறேன் என்றும் அதில் பிரச்சனை செய்வதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும் சரிதான். வழக்கில் என்ன பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்று எனக்குத் தெரியவில்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல

14.10 அடி அகலம் மற்றும் 100 அடி நீள பகுதியானது நிலமாக தான் உள்ளது அதில் வழி ஏற்படுத்திக் கொடுக்குமாறு இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ஏற்கனவே மாமூல் வழி செல்கிறது அதைத்தான் நான் கேட்டுள்ளேன். மேற்படி நிலத்தில் 10 அடி அகலம் மற்றும் 100 அடி நீள வழியாக புனரமைப்பு செய்து வழியாக பயன்படுத்த செயலுறுத்துக் கட்டளை எதுவும் கேட்கவில்லை என்றால் சொன்னால் சரிதான்.

15.வழக்குரையுடன் தாக்கல் செய்திருக்கும் மாதிரி வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ள வண்டி வழி போன்ற வரைபடம் யார் ஏற்பத்தினார் என்றால் வக்கீல் தான் தயார் செய்தார். வட்டாட்சியர் அலுவலகத்தில் பெறப்பட்ட புலவரைபடத்தில் அதுபோன்று எதுவும் குறிப்பிட்டு வரையப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல இருக்கிறது. இந்த நீதிமன்றம் மூலம் நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த நில அளவையர் கொடுத்த வரைப்படத்திலும் எந்தவிதமான வழி இருப்பதாக குறிப்பு எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான், மாமூலாக இருக்கும் வழியை பயன்படுத்தி வருகிறோம் அதைத்தான் தடங்கல் செய்கிறார்கள்.

16.இந்த வழக்கில் எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்ததற்கு பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் ஆமாம். இன்றைய தேதி வரையிலும் சொத்தை அளப்பதற்கு நில அளவையர் மூலம் அளக்கவில்லை என்றால் ஆமாம். எந்த தேதியில் பிரதிவாதிகள் வழி குறித்து பிரச்சனை செய்தார்கள் என்றால் தற்போது நினைவில்லை.

17.நான் கூறும் பிரச்சனையானது சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டு இருக்குமா என்றால் 2018 ஆம் வருடத்தில் பிரச்சினை செய்தார்கள். அன்றைக்கு தான் வழி வேண்டும் என்று வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். இரண்டு அடி வரப்பு வழி தான் உள்ளது என பதில் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டதா என்றால் ஆமாம். பிரதிவாதிகள் வழியை சமன் செய்து நிலமாக மாற்றிக் கொண்டார்கள் என்றோ என்னுடைய

வழக்கறிஞர் அறிவிப்பில் ஏதாவது தெரிவித்து இருந்தேனா என்றால் இல்லை.

18.எனது வக்கீல் இடம் பிரதிவாதிகள் வழியை சமன் செய்து நிலம் ஆக்கினார்கள் அதை மீட்டுக் கொடுக்க வேண்டுமென தெரிவித்தேன் என்றால் இல்லை. இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் தற்போது வரை நான் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரிதான் அதில் கூறியுள்ள அளவீடுகள் தவறு என தற்போது வரை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் இரண்டு அடி அகல நடைப் பாதையாக தான் உள்ளது என அறிக்கையில் தெரிவித்ததற்கு நான் தற்போது வரை எனது வக்கீலிடம் ஆட்சேபனை உள்ளது என தெரிவித்தன என்றால் இல்லை.

19.பிரச்சனைக்குரிய 10 அடி அகலம் மற்றும் 100 அடி நீளம் உள்ள நிலத்தில் தென்னங்கண்று வைத்ததாக கூறுவது எப்போது என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு மாதம் முன்பு இருக்கும். அந்தத் தென்னங்கன்றுகள் தற்போது மரமாக உள்ளது என்றால் சரிதான். சுமார் 20 மரங்கள் இருக்குமா என்றால் பதினைந்து மரங்கள் இருக்கும். மேற்படி 15 தென்னை மரங்கள் குறித்தும் தற்போது வரை இந்த வழக்கில் நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

20.இந்த வழக்கில் பிரதிவாதிகள் என்ன பதிலுரை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று என்னிடம் யாரும் படித்து கூறவில்லை என்றால் ஆமாம். வண்டி வழி எதுவும் வழக்கு சொத்தில் இல்லை என்றும் நான் கற்பனையாக வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எனவே நான் எனவே நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

***குறுக்கு விசாரணை முடிவுற்றது. மறுவிசாரணை இல்லை.***

ESHWAR VISWANATHAN

DISTRICT MUNSIF
Digitally signed by ESHWAR VISWANATHAN
Location: VANIYAMBADI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாணியம்பாடி,